1996 பிப்ரவரி 26]

தற்போது இதனுடைய சட்டம் 42 விதி 2ன் கீழ் பரம்பரை அறங்காவலர்களுக்கு அறிவிப்பு தந்து, அவர்களுடைய பதிலைப் பரிசீலித்து முடிவு செய்த பிறகுதான் கூடுதலாக பரம்பரை அல்லாத அறங்காவலர்களை நியமிக்க வேண்டும் என்ற நிலைமை இருக்கிறது. திருக்கோயில் நிர்வாக மேம்பாட்டைக் கருதி, அந்த விதிமுறையை மாற்ற நேரடியாக திருக்கோயில்களுக்கு கூடுதலாக பரம்பரை அல்லாத அறங்காவலர்களை நியமனம் செய்ய வேண்டிய சட்டத் திருத்தம் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டு மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. ஆந்திர மாநிலத்தில் இதேமாதிரி ஒரு பிரச்சினை வந்து அவர்கள் உச்சநீதிமன்றத்தில் பரம்பரை அல்லாத அறங்காவலர்களை நியமனம் செய்ய வேண்டும் என்ற வழக்கில் உச்சநீதிமன்றம் பரம்பரை அறங்காவலர் அல்லாதவர்களையும் நியமனம் செய்யலாம் என்று ஒரு ஆணையைப் பிறப்பித்திருக்கிறார்கள். எனவே, கூடிய விரைவில் இதுபற்றி மத்திய அரசின் ஒப்புதல் பெற்று சட்ட சீர்திருத்தம் கொண்டுவரப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பரை அறங்காவலர்களால் தற்பொழுது நிர்வகிக்கப்பட்டு வரும் திருக்கோயில்களுடைய எண்ணிக்கை எவ்வளவு என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பரை அறங்காவலர்களால் நிர்வகிக்கப்பட்டு வரும் திருக்கோயில்களின் எண்ணிக்கை மொத்தம் 4,185.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 140, டாக்டர் ச. ஆரோக்கியசாமி, மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

140--

தொங்கு பாலம் அமைத்தல்.

*88128--**டாக்டர் ச. ஆரோக்கியசாமி:***

மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருச்சி அருள்மிகு தாயுமானவர் திருக்கோயிலான மலைக் கோட்டை மேல் அமைந்துள்ள மாணிக்க விநாயகர் ஆலயம் செல்ல தொங்கு பாலம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை மேல் அமைந்துள்ள விநாயகர் ஆலயத்திற்கு செல்ல தொங்குபாலம் அமைக்க இயலாது.

(ஆ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

முற்பகல் *11–20*

டாக்டர் ச. ஆரோக்கியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'அப்பா நான் வேண்டுதல் கேட்டு அருள்புரிதல் வேண்டும் எப்பாலும் எப்பதமும் எங்கணும் நான் சென்றிடின்

எந்தையே நினது அருட்புகழை இயம்பிடுதல் வேண்டும்'

என்று சொன்ன தாயுமானவருடைய திருக்கோயிலாம் மலைக்கோட்டை மாநகரின் மேலே அமைந்திருக்கின்ற மாணிக்க விநாயகர் ஆலயத்திற்குச் செல்வதற்கு 'விஞ்ச்' அமைக்க வேண்டுமென்று பலமுறை நான் வற்புறுத்தி இருக்கிறேன். சட்டப் பேரவையிலும் இதைப்பற்றியெல்லாம் பலமுறை பேசி இருக்கிறேன். அந்த மக்களுக்கு நான் தேர்தலின்போது செல்லுகின்ற காலத்தில் அவர்களுக்கு உறுதிமொழி அளித்திருக்கிறேன். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நிச்சயமாக தொங்கு பாலத்தை மலைக்கோட்டை மேலே அமைப்பார்கள் என்று நான் உறுதி கூறியிருக்கிறேன். எங்களுடைய தாயும் தந்தையுமாக விளங்குகின்ற புரட்சித் தலைவி அவர்களுடைய சார்பிலே சொல்லியிருக்கின்ற எனது சொல்லுக்கொப்ப மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் தாயுமானவர் திருக்கோயிலான மலையிலே உள்ள அந்த மாணிக்க விநாயகர் ஆலயத்திற்குச் சென்று வருவதற்கு வயதானவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, *254* அடி உயரம் உள்ள அந்த மலை மேலே ஏறுவதற்குத் தொங்கு பாலம் அமைப்பதற்கு மறுபரிசீலனை செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வாலயத்திற்கு தொங்கு பாலம் அமைக்க வேண்டும் என்றால் பாலம் அமைத்திட இரண்டு உயரமான

1996 பிப்ரவரி 26]

இடங்கள் இருந்திடல் வேண்டும் இடத்தை ஆய்வு செய்ததில் மலைக்கோட்டை அளவிற்கு உயரமான அதனுடன் இணைக்கக்கூடிய மற்றொரு உயரமான இடம் அருகில் இல்லை என்ற காரணத்தினால், தொங்கு பாலம் அமைக்கும் சாத்தியக்கூறு இல்லை எனக் கூறிக்கொள்கின்றேன்.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரிக் கரையிலிருந்து அந்தத் தொங்கு பாலத்தை அமைப்பதற்கு 'பி.எச்.இ.எல்.' நிறுவனத்தார்கள் முன்வர இருக்கிறார்கள். அவர்கள் எங்களுக்கு பெர்மிஷன் கொடுத்தால் நாங்கள் செய்து தருவோம் என்று எங்களுடைய மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலேயே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் ஏற்படுத்தப்பட்ட நிதியும் அங்கே இருக்கிறது. ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய்க்கு மேலே நிதி இருக்கிறது. அதுவுமில்லாமல் அந்த நிதிக்காக மற்ற தனியார்கள் டால்மியா சிமெண்ட் போன்றவர்கள் எல்லாம் பணம் தருவதற்குத் தயாராக இருக்கிறார்கள். சொன்னால் ஒரு வாரத்திற்குள் அந்தப் பணம் ரெடியாகிவிடும். காவிரி பாலத்திற்கு அருகில் ஒரு உயரமான கட்டிடத்தை எழுப்பி அங்கிருந்து செல்வதற்குரிய வாய்ப்புக்களை எல்லாம் இதற்கு முன்பு இருந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சரியாகச் செய்திருந்தார்கள். அது எப்படியோ இப்போது விடப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதையெல்லாம் கருத்தில் கொண்டு இந்தத் தொங்கு பாலத்தை அமைப்பதற்கு முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே கூறியதுபோல் தொங்கு பாலம் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. ஆனால் இழுவை இரயில் அமைப்பதைப்பற்றி ஆய்வு செய்திருக்கிறார்கள். இழுவை இரயில் அமைத்திடும் கருத்துருவுக்கு வடிவம் கொடுத்திட 1972–ஆம் ஆண்டு பொதுப்பணித் துறையின் மூலம் ஆய்வு செய்து ரூ.3 இலட்சத்திற்கு திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. இதன் தொடர்ச்சியாக 1974–ல் திட்ட மறு மதிப்பீடு ரூபாய் 5, 88, 000–க்கும் தயார் செய்யப்பட்டது. இழுவை இரயிலுக்கான உதிரிப் பாகங்கள் அப்போதைய காலக்கட்டத்தில் கிடைக்க காலதாமதம் ஏற்பட்டதால் இப்பணிகள் தொடங்கப்படவில்லை. இந்து அறநிலையத் துறை இழுவை இரயில் அமைப்பதன் முக்கியத்துவம் கருதி மீண்டும் பி.எச்.இ.எல். நிறுவனத்திடம் இதுபற்றி திட்டம் தயாரித்துக் கொடுத்திட

கேட்டுக்கொள்ளப்பட்டது. இவர்கள் இத்திருக்கோயிலின் சுற்றுப்பிரகாரத்தைச் சுற்றிப்பார்த்துவிட்டு இழுவை இரயில் அமைக்க சாத்தியக்கூறு இல்லை என்று தீர்மானித்துவிட்டார்கள். வேகமாக வளர்ந்து வரும் விஞ்ஞானத்தின் வளர்ச்சியின் உதவியால் எப்படியும் இழுவை இரயில் அமைத்திட முடியும் என்று இந்த அரசு கருதினாலும் *1985*-ஆம் ஆண்டு நிலைமைபடி இதனை அமைக்க ரூ. *70* இலட்சம் செலவாகும் என்று கணக்கிடப்பட்டதாலும் இத்திருக்கோவில் நிதிநிலை தற்போது இழுவை இரயில் அமைப்பதற்குப் போதுமானதாக இல்லாத காரணத்தினாலும் தற்சமயம் இம்முயற்சிகள் மேற்கொள்ள சாத்தியக்கூறுகள் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

135--

பெரம்பூர் ஊராட்சியில் ஆரம்பப் பள்ளிக்கூடம் திறத்தல்

33828*--திரு. சி. சுவாமிநாதன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) புதுக்கோட்டை மாவட்டம், குன்னாண்டார் கோவில் ஒன்றியம், பெரம்பூர் ஊராட்சி புதுப்பட்டில் போதிய மாணவர்கள் இருப்பதால் அங்கு புதிதாக ஆரம்பப் பள்ளிக்கூடம் திறக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

137--

கீழப்பாவூர் ஒன்றியத்தில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்

20697*--திரு. எஸ்.எஸ். ராமசுப்பு:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--